Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 150 / 2022

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | ரகுவரன் | Calling: | விவசாயம் |
| Father's Name: | அம்பிகா | Religion: | |
| Village: | கீழபள்ளத்தூர் | Age: | 49 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 25.02.2026.

எதிரி ஆஜர்
ம.சா.1 மனுவின் பேரில் அழைத்து குறுக்கு விசாரணை.

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம். எதிரி நாகராஜ் எனக்கு எப்படி பழக்கம் என்றால் எனது நண்பர் மூலம் பழக்கம். எதிரி நாகராஜ் என்ன வேலை செய்கிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் அரிசி வியாபாரம் செய்வதாகவும், கோல்டு வியாபாரம் செய்வதாகவும் கூறினார். நான் அவரிடம் தங்கம் ஏதேனும் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. அவரது அரிசி கடையை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் பணம் கேட்டாரா என்றால் கேட்டார், எந்த தேதியில் பணம் கேட்டார் என்றால் 25.07.2021. பணம் கேட்டு எப்போது கொடுத்தேன் என்றால் அவர் கேட்ட அன்றைய தினமே கொடுத்து விட்டேன். அப்படியானால் நான் அவ்வளவு பணத்தை கையில் வைத்திருந்தேனா என்றால் ஆமாம். நான் பணம் கொடுக்கும் போது அதை பாண்டு பேப்பரிலோ, வெள்ளை தாளிலோ எழுதி வாங்கினேனா என்றால் இல்லை, காசோலை கொடுத்தார். எதிரிக்கு எழுத படிக்க தெரியுமா என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

பணம் கொடுக்கும்போது காசோலையில் யார் எழுதியது என்றால் அவர் ஏற்கனவே எழுதி தான் வைத்திருந்தார். காசோலையில் பணத் தொகையையும் எழுதிதான் வைத்திருந்தாரா என்றால் ஆமாம். நான் எத்தனை மணிக்கு எந்த இடத்தில் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றாலும், காசோலையை எத்தனை மணிக்கு வாங்கினேன் என்றாலும் 11.30 மணி நெக்குந்தியிடம். நெக்குந்தியில் நான் எதிரியிடம் பணம் கொடுக்கும்போது யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை. நான் வழக்கு காசோலையை எந்த தேதியில் வங்கியில் தாக்கல் செய்தேன் என்றால் 02.12.2021. வங்கியில் காசோலையை செலுத்தி பணம் எடுத்தேனா என்றால் காசோலை பணம் இல்லை என 04.12.2021 அன்று திருப்பப்பட்டது. மேற்படி விவரத்தை நான் எதிரியிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் 27.12.2021. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எதிரியை சென்றடைந்ததா என்றால் அது பற்றி தெரியவில்லை. முதல் விசாரணை ஆணையுறுதித்தாளில் நான் தான் சரியாக இருந்ததால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

ஆணையுறுதித்தாளில் 3வது பாராவில் வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு ஒன்றினை எதிரிக்கு அனுப்பினேன், மேற்படி அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டதற்கான இதுநாள்வரையில் எந்த ஒப்புகை அட்டையோ அல்லது மேற்படி திருப்பப்பட்ட அஞ்சல் உறையோ என்னுடைய வழக்கறிஞருக்கு கிடைக்கப்பெறவில்லை என கூறியுள்ளேனா என்றால் எனது வழக்கறிஞருக்குத்தான் தெரியும். ஆன்லைன் மூலமாக எதிரிக்கு சட்ட அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதாக குறிப்பு இல்லை என ஆணையுறுதித்தாளில் கூறியுள்ளேன் என்றால் எனது வழக்கறிஞருக்குத்தான் தெரியும். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதித்தாளில் உள்ள விவரம் எதுவும் தெரியாது என்றாலும், வழக்கறிஞர் சொன்னதால் கையொப்பம் மட்டும் செய்தேன் என்றாலும் எனது வழக்கறிஞருக்குத்தான் தெரியும். வழக்கை நீதிமன்றத்தில் எப்போது தாக்கல் செய்தேன் என்றால் 27.12.2021. வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு எந்த தேதி சார்பு செய்யப்பட்டது என்றால் எனது வழக்கறிஞருக்குத்தான் தெரியும்.

இவ்வழக்கு 30 நாள் காலதாமதமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது வழக்கறிஞருக்குத்தான் தெரியும். டிராக் கன்சைன்மெண்ட் பில் எனது வழக்கறிஞர் தான் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்தார் என்றால் சரிதான். எதிரி கொடுத்த காசோலை எதிரியினுடையது தான் என்று எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் அவரது பெயர், வங்கிகணக்கு எண், கையொப்பம் இருந்தது. காசோலையில் எதிரியின் பெயர் கீழே இருந்ததா என்றால் இருந்தது.

வங்கிக்கணக்கு எண் எதிரியினுடையது என்பதை நிரூபிப்பதற்காக எதிரி வங்கி பாஸ்புக் என்னிடம் காண்பித்தாரா என்றால் இல்லை, காசோலை திருப்பப்படும் போது அனைத்து விவரங்களும் அதில் வரும். எனக்கு வழக்கு விவரம் எதுவும் தெரியவில்லை, அனைத்து விவரமும் எனது வழக்கறிஞர் தான் எழுதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் புகாரிலோ, ஆணையுறுதித்தாளிலோ எதிரிக்கு எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டது என்பதை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் எனது வழக்கறிஞருக்குத்தான் தெரியும். நான் எதிரிக்கு என்ன தேவைக்காக ரூ.1,00,000/- பணம் கடன் கொடுத்தேன் என்றால் அரிசி வியாபாரத்திற்காக வாங்கினார். மேற்படி விவரத்தை புகாரிலோ, ஆணையுறுதித்தாளிலோ கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் நீதிமன்றத்தில் தாமதமாக வழக்கு தாக்கல் செய்ததாக மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞருக்குத்தான் தெரியும்.

எனக்கு எதிரியை தெரியாது என்றாலும், காசோலையை யாரிடமிருந்தோ பெற்று எதிரியிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கத்தோடு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடமிருந்து பணம் எதுவும் வாங்கவில்லை என்றாலும், எதிரி காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அதனால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டியது என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் எதிரியின் காசோலையை யாரிடமிருந்து வாங்கினேன் என்ற விவரத்தை மறைத்து அனைத்து சங்கதிகளையும் வழக்கறிஞர் தான் தாக்கல் செய்தார் என்று கூறி வழக்கறிஞருக்கு தான் அனைத்து விவரமும் தெரியும் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரி வங்கிக்கணக்கை சரியாக வைத்திருந்தால் Fund Insufficient என காசோலை திருப்பப்பட்டிருக்காது, அதனால் காசோலை எதிரி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும், எதிரியிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**சாட்சி கையொப்பம்**

**(ஓம்.) ரகுவரன்**

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K